விலை ரூ. 50
பக்கங்கள் 12

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 132

வெள்ளிக்கிழமை 07 ஏப்ரல் 2023

பங்குனி 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

**முச்சந்தி முரளி**



"பத்துப் பத்தாக் குறைஞ்சாலும் இப்பத்தை சீவியத்துக்கு உழைக்கிற காசு பத்தாது கண்டியளோ"

## சமுர்த்தி தருவதாகக் கூறி பெண்ணிடம் பணம் பறிப்பு

அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 7

அச்சுவேலி, வளலாயில் சமுர்த்திக் கொடுப்பனவை அதிகரித்து வழங்குவதாகத் தெரிவித்து தனிமையில் இருந்த விசேட தேவையுடைய பெண்ணிடம் இனந்தெரியாத ஒருவரால் »10

யாழ்ப்பாணம் போதனாவில்

## மருத்துவ மாணவர்களின் கற்றலுக்கும் இடையூறு!

மருத்துவர் மயூரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 7

அரசாங்கத்தின் வினைத்திறனற்ற நடவடிக்கைகள் காரணமாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நோயாளர்களின் மருத்துவ இடர்பாட்டுக்கு மேலதிகமாக மருத்துவ மாணவர்களின் கல்விக்கும் பல்வேறுபட்ட இடையூறுகள் »11

## கோதுமை மா ரூ.10 குறைப்பு

கொழும்பு, ஏப். 7

நேற்று நள்ளிரவு முதல், சதொச விற்பனை நிலையங்களில் கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று 3 பொருள்களின் விலைக் குறைப்பு அறிவித்தலை சதொச நிறுவனம் விடுத்திருந்தது. அவற்றில் கோதுமை மாவும் ஒன்றாகும். இதன்படி, ஒரு கிலோ கோதுமை மா 10 ரூபாவால் குறைக்கப்பட்டுபுதியவிலையாக 225 ரூபா நிர்ணயிக்கப் »03

இலங்கையில் —

# இந்து மதத்தைப் பாதுகாக்க சர்வதேச பாதுகாப்பு வலயம்

## மோடிக்கு புலம்பெயர் அமைப்புகள் கடிதம்

**கொழும்பு, ஏப்ரல் 7**

**இலங்கையில் இந்து மதத்துக்கும், அதன் பாரம்பரியத்துக்கும் ஆபத்தும் அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஏழு புலம்பெயர் அமைப்புகள் இணைந்து கடிதம் எழுதியுள்ளன.** »11



## பாணின் விலை ரூ.10 குறைப்பு!

யாழ்., ஏப். 7

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை முதல் 450 கிராம் எடையுள்ள பாணின் விலையை 10 ரூபாவால் குறைக்க நடவடிக்கை »10

## ஊழல் ஒழிப்புச்சட்டவரைவு மே மாதம் நாடாளுமன்றில்

கொழும்பு, ஏப். 7

ஊழல் ஒழிப்புச்சட்டவரைவு மே மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை »03

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எதிர்ப்புக்குப் பணிகிறது அரசு

கொழும்பு, ஏப். 7

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் »10

## புத்தாண்டுக்குப் பின்னர் யாழில் சூரியன் உச்சம்

யாழ்ப்பாணம், ஏப். 7

சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர், யாழ்ப்பாணத்தில் சூரியன் உச்சம் கொடுக்கும் »03

## ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் உடையும்!

50 பேர் அரசுடன் சங்கமிப்பர்

வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 7

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து 50 க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் »12



## மின்சாரம் தாக்கி மாணவன் பலி!

யாழ்., ஏப். 7

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில், மின்சாரம் தாக்கியதில் மாணவன் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். மோகனதாஸ்கிஷோத்மன் (வயது-17) என்ற மாணவனே »11

ஹர்ஷ டி சில்வா உள்ளிட்ட

## எதிர்க்கட்சி அணியொன்று அரசுடன் இணையத் தயார்

ராஜித சேனாரத்ன வெளிப்படை



கொழும்பு, ஏப். 7

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து, ஹர்ஷ டி சில்வா உள்ளிட்ட பல பிரமுகர்கள் அரசுடன் இணைவதற்குத் தயாராக உள்ளனர் என்று ராஜித சேனாரத்ன நேற்று வெளிப்படை »03

## எல்லை தாண்டிய மீன்பிடி 11 மீனவர்கள் விடுதலை!

ஒருவருக்குச் சிறைத்தண்டனை

விரிவு:- பக்.11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் வேட்பாளராவதற்கு பசிலும் பச்சைக்கொடி

கொழும்பு, ஏப். 7

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பது மொட்டுக் கட்சியில் பலரினதும் விருப்பமாகும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்திருந்தார். இது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவிடம் வினவிய போது,

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என மொட்டுக் கட்சியில் பலர் யோசனை முன்வைத்துள்ளனர். எனினும், யாரை வேட்பாளராகக் களமிறக்குவது என்பது தொடர்பில் மொட்டுக் கட்சி இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறும் என்று தெரியாது. வேட்பாளர் தொடர்பில் நாம் இப்போது அவசரப்படக்கூடாது. மொட்டுக் கட்சி களமிறக்கும் ஜனாதிபதி வேட்பாளர்தான் வெற்றியடைவார் என்பது உண்மை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர். அவர் மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பது மொட்டுக் கட்சியில் பலரினதும் விருப்பம். எனினும், இது தொடர்பில் அவருடன் நாம் உத்தியோகபூர்வமாகப் பேசவில்லை. முதலில் தேர்தல் தொடர்பில் அறிவிப்பு வரட்டும். அதன்பின்னர் வேட்பாளர் தொடர்பில் பேசி இறுதி முடிவு எடுப்போம் - என்றார். (ஒ-22)

# உரவிநியோகத்துக்கு இனிமேல் கியூ.ஆர்.

கொழும்பு, ஏப். 7

இந்த வருட பெரும்போகத்துக்கு உர விநியோகம் உள்ளிட்ட நிதி நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகளின்போது விவசாயிகளுக்கு கியூ.ஆர். குறியீடு வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பெரும்போகத்தின்போது அவசியமான இரசாயன உரம், சேதனப் பசளை, விதைகள் மற்றும் விவசாயப் பொருள்களுக்கான நிதி நிவாரணம் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக சகல விவசாயிகளுக்கும் கியூ.ஆர் குறியீடு வழங்கப்படும்.

அத்துடன் இந்த வருட பெரும்போகத்தின் போது, உர விநியோக நடவடிக்கைகளை தனியார் பிரிவுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது - என்றார். (ச-இ)

# வருமான வரி தொடர்பில் தவறான சித்திரிப்பாம்!

## அமைச்சர் பந்துல கூறுகின்றார்




கொழும்பு, ஏப்.7

வரி விதிப்புத் தொடர்பாகச் சிலர் தவறான விம்பத்தைச் சித்திரித்துள்ளனர். 36 வீதத்தை உழைக்கும் வரியாகச் செலுத்த வேண்டும் என்று கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது.

இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மாதாந்தம் ஒரு லட்சத்து 47 ஆயிரம் ரூபா வருமானம் ஈட்டும் ஒருவர் வரியாக 2 ஆயிரத்து 500 ரூபா மட்டுமே செலுத்த வேண்டும்.

2 லட்சம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறுபவர் 7 ஆயிரத்து 500 ரூபா வரியாகச் செலுத்த வேண்டும். எரிவாயுவின் விலை ஆயிரத்து 5 ரூபாவாலும், பெற்றோலின் விலை 60 ரூபாவாலும் குறைக்கப்பட்டு வாரத்துக்கு 20 லீற்றர் பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அப்போது பெற்றோல் மூலம் மக்களுக்கு மாதம் 4 ஆயிரத்து 800 ரூபா லாபம் கிடைக்கிறது. எரிவாயு மற்றும் பெற்றோல் விலை குறைப்பால் ஒரு நபருக்கு 5 ஆயிரத்து 805 ரூபா சேமிப்பு கிடைக்கிறது. ஒரு லட்சம் ரூபாவுக்குக் குறைவாக சம்பாதிக்கும் நபருக்கு வருமான வரி விதிக்கப்படுவதில்லை. ஒரு லட்சம் ரூபாவுக்குக் குறைவான வருமானம் ஈட்டுபவர்கள் ஒவ்வொரு தனிநபரின் குறுகிய அரசியல் இலக்குகளை அடைவதற்காக போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

ஒரு நாட்டின் ஆசிரியர்கள் கற்பிப்பதை நிறுத்திவிட்டு போராட்டங்களில் ஈடுபட்டால், எதிர்கால சந்ததியினரின் கதி என்னவாகும்? 36 சதவீதம் வரி கட்ட வேண்டும் என்ற போலிக் கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. அப்படி எதுவும் இல்லை - என்றார். (எ-இ)

# கருகம்பனைத் திடலில் சித்திரை விளையாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 7

கருகம்பனை பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு 'சித்திரை விளையாட்டு விழா' கருகம்பனை பொது விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு சைக்கிள் ஓட்டப் போட்டியும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 12ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் கலை, கலாசார பாரம்பரிய நிகழ்வுகளான தலையணைச் சண்டை, தயிர்முட்டி உடைத்தல், கிடுகு பின்னுதல் உள்ளிட்ட சிறுவர்களுக்கான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் இரவு இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது என கருகம்பனை தமிழ் மக்கள் சனசமூக நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

# தொலைபேசி அழைப்புக்களை ஒட்டுக்கேட்கவில்லையாம்!

## மறுக்கிறது பாதுகாப்பு அமைச்சு


கொழும்பு, ஏப். 7

தொலைபேசி அழைப்புக்களை ஒட்டுக்கேட்பதாக வெளியான தகவல்களை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

சமூக ஊடகங்களில் பரவும் இவ்வாறான தகவல்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு தெளிவூட்டலை விடுத்துள்ளது.

'அனைத்துத் தொலைபேசி உரையாடல்களையும் பதிவுசெய்தல், தொலைபேசி அழைப்புகளை சேமித்தல் ஒட்டுக்கேட்டல், வட்ஸ்அப், பேஸ்புக், ருவிற்றர் அழைப்புகளை கண்காணிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகள் முற்றிலும் தவறானவை' என்று பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஒ-இ)

# சிலதினங்களுக்குள் எரிபொருள் வரிசை?



கொழும்பு, ஏப். 7

நாட்டில் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு அடுத்த சில நாள்களுக்கு ஏற்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிப்பிரிவின் உயரதிகாரி ஒருவர் எரிபொருள் முற்பதிவுகளை பணம் மூலம் மாத்திரமே பதிவு செய்யலாம் என அறிவித்துள்ளார்.

பூரணை தினமான நேற்று முன்தினம் புதன்கிழமை வங்கிகள் மூடப்பட்டமையால் பணத்தை பெறுவதில் எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதனால் பல எரிபொருள் நிலையங்கள் முற்பதிவுகளை செய்யவில்லை.

இந்தநிலையில் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டபோதும் மக்கள் வரிசையில் காத்திருக்க வேண்டி நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# மதுபானசாலைகள் இன்று மூடப்படாது

கொழும்பு, ஏப். 7

புனித வெள்ளி தினமான இன்று அரச விடுமுறை வழங்கப்பட்டபோதும் நாடளாவிய ரீதியில் அனைத்து மதுபான நிலையங்களும் திறக்கப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை தமிழ்- சிங்கள புத்தாண்டு பண்டிகைக் காக எதிர்வரும் 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் மதுபான நிலையங்கள் மூடப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவ விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 7

குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு விசேட கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் அனைத்து உபயகாரர்களையும் நிர்வாக அங்கத்தவர்களையும் பங்கேற்குமாறு ஆலய நிர்வாகசபையினர் அறிவித்துள்ளனர். (ச-66)

# காரைக்கால் - காங்கேசன்துறை கப்பல் சேவை தவறான தெரிவு

## வன்னி மாவட்ட எம்.பி.யான சாள்ஸ் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப். 7**

**காரைக்காலுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் 56 கிலோ மீற்றர் கடல்மைல் தூரம். ஆனால் இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் 18 கிலோ மீற்றரே கடல்மைல் தூரம். குறைந்த செலவில் முன்னெடுக்கவேண்டிய கப்பல்சேவையை விடுத்து இவ்வாறு அதிக செலவுள்ள கப்பல் சேவையைத் தெரிவு செய்தது தவறு என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவின் புதுச்சேரி மாநிலத்தின் காரைக்காலிலிருந்து இலங்கையின் காங்கேசன்துறை வரை கப்பல் சேவையை முன்னெடுக்க இருதரப்பாலும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இராமேஸ்வரத்துக்கும், தலைமன்னாருக்கும் இடையில் கப்பல் சேவை ஏற்கனவே இருந்தது. புவியியல் ரீதியில் இராமேஸ்வரத்துக்கும், தலைமன்னாருக்கும் இடையில் 18 கிலோமீற்றர் கடல் மைல் தூரமே காணப்படுகிறது. ஆனால் காரைக்காலுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் 56 கிலோமீற்றர் கடல் மைல் தூரம் காணப்படுகிறது. மூன்று மடங்கு அதிகமான தூரத்தைக் கொண்டுள்ள காரைக்கால் - காங்கேசன்துறை கப்பல் சேவையை ஏன் ஆரம்பிக்கவேண்டும் என்ற கேள்வி தோற்றம் பெற்றுள்ளது.

இராமேஸ்வரம்-தலைமன்னார் இடையில் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை காணப்பட்டது. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோது இவ்விடயம் தொடர்பில் கதைக்கப்பட்டது. இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என அவர் வாக்குறுதி வழங்கினார். ஆனால் தற்போது மாறுபட்ட முறையில் தீர்மானம் இயற்றப்பட்டு காரைக்கால் - காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னாரிலிருந்தா அல்லது காங்கேசன்துறையிலிருந்தா கப்பல் சேவை நடத்துவது பொருத்தமானது என்பதை முடிவெடுக்கவேண்டும். ஆட்சியாளர்கள் எடுத்த தவறான பொருளாதார கொள்கையால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது. ஆகவே இராமேஸ்வரம் தலைமன்னார் கப்பல் சேவையை ஆரம்பித்தால் பல செலவுகளை குறைத்துக் கொள்ள முடியும். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி உட்பட துறைசார் தரப்பினரும் விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஓ-இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### கோதுமை மா...

பட்டுள்ளது. ஒரு கிலோ பெரியவெங்காயம் 22 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 97 ரூபாவும், 425 கிராம் ரின்மீன் 30 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 490 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### ஊழல்...

எடுக்கப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல் ஒழிப்பு சட்ட வரைவு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கு கடந்த மார்ச் 13ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அத்துடன், சட்டவரைவை நாடாளுமன்றத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கவும் அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞர்களால் தயாரிக்கப்பட்ட மேற்படி சட்டவரைவுக்கு சட்டமா அதிபரின் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் சொத்து விவரங்களை வெளியிடுவதற்கு, ஒரு சிலருக்கு விலக்களிக்கப்பட்டு வந்தது. எனினும், புதிய சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி, மாகாண முதலமைச்சர்கள், ஆளுநர்கள், தூதுவர்கள், தூதரக அதிகாரிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் தமது சொத்து விவரங்களை வெளியிடவேண்டும் - என்றார். (அ-ம)

### புத்தாண்டுக்குப்...

என்றும் இதனால், வெப்பநிலை 35 பாகையைத் தாண்டும் என்றும் பிராந்திய வளிமண்டலத் திணைக்களப் பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- சூரியன் வடதுருவம் நோக்கிய பாதையில் கடந்த 5ஆம் திகதி இலங்கையின் தெற்குப் பகுதியான அம்பாந்தோட்டைப் பகுதியில் உச்சம் கொடுத்த நிலையில் எதிர்வரும் 14ஆம் திகதிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் உச்சம் கொடுக்கும் என்று எதிர்பார்க்கின்றது. தற்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வெப்பநிலை 34 பாகையைத் தாண்டியுள்ள நிலையில், எதிர்வரும் 14ஆம் திகதிக்குப் பின்னர் வெப்பநிலை 35 பாகையைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக 15ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரையில் வெப்பநிலை மிகவும் அதிகமாகக் காணப்படும் - என்றார். (அ-ம-20)

### எதிர்க்கட்சி...

யாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- யார் என்ன சொன்னாலும், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஹர்ஷ டி சில்வா போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கத் தயாராகவுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி இது தொடர்பில் (அரசை ஆதரிப்பது தொடர்பில்) தீர்மானமொன்றை எடுக்காவிட்டால், மேற்படி நபர்கள் ஒரு குழுவாக இணைந்து ஜனாதிபதியை ஆதரிப்பார்கள். உண்மையில் பலர் ஜனாதிபதி ரணிலுடன் இணைந்து பணியாற்றவே விரும்புகின்றனர். ஆனால், தேர்தலில் அவருக்கு எதிராகச் செயற்பட்டதால் தயக்கம் கொண்டுள்ளனர். ஜனாதிபதிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் கொள்கை வேறுபாடுகள் இல்லை. கொள்கை வேறுபாடுகள் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து நாம் தனித்துச் செல்லவில்லை. மாறாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முடிவெடுக்கும் பாணியில் உள்ள அதிருப்தி காரணமாகவே பிரிந்துசென்றோம். அத்துடன், ஜனாதிபதி நாட்டை முன்னரை விடவும் சிறந்த நிலைக்குக் கொண்டுசென்றுள்ளார் என்ற கருத்து உண்மையானதும் யதார்த்தமானதுமாகும் - என்றார். (அ-ம)




**பட்சி கூண்டுக்குள்ளாலை வெளிக்கிட்டுப் போய், சாதகக் குறிப்பை எடுக்கேக்குள்ளை எங்கட வடக்கு மாகாணக் கவர்னரின்ரை குறிப்புத் தான் அடிக்கடி வருகுது. என்ன செய்யிறது. பாவம் கவர்னர் பட்சியைப் பிடிச்சு கறி காய்ச்சலாம் எண்டு கூட சிலவேளை யோசிக்கக்கூடும். அதுக்கு பட்சியாலை ஒண்டும் செய்ய ஏலாது தானே.**

**வடக்கு மாகாண பிரதம செயலாளரா ஒரு சிங்கள அதிகாரி இருக்கிறார் எண்டது ஊரறிஞ்ச விசயம் தானே. அவர் வவுனியாவில அரசாங்க அதிபரா இருந்திட்டுத்தான் பிறகு இப்பிடி புரமோசனில பிரதம செயலாளரா வந்தவர். அதால வவுனியா நிலைவரம் முழுக்க ஆளுக்கு அத்துப்படி. இந்த நிலையில வவுனியாப் பிரச்சினை ஒண்டில தேவையில்லாமல் தன்ர தலை உருளப்போகுதெண்டு அந்தச் சிங்களப் பிரதம செயலாளர், இன்னொரு தமிழ் அதிகாரிக்குச் சொல்லி அழுதிருக்கிறாராம்.**

**விசயம் என்னெண்டாப் பாருங்கோ, வவுனியா புது பஸ் ஸ்ராண்டுக்குப் பக்கத்திலை 68 ஏக்கர் காணியில பண்ணையொண்டு கிடக்கு. இந்தக்காணியிலை 5 ஏக்கரை கிரவுண்ட் ஒண்டு கட்டுறதுக்காகவும், மிச்சமுள்ள 63 ஏக்கரை அரசதேவைக்காகவும் குடுக்கச் சொல்லி ஜனாதிபதி செயலகத்தில இருந்து கடிதமொண்டு வந்திருக்கு. ஆனால் மேல்மட்டம் வெளியில விசயம் பரவாமல் அந்தக் கடிதத்தை மறைச்சுப் போட்டுது. அந்தக் கடிதத்தைச் சும்மா விட்டிருந்தாலே ஒருத்தருக்கும் டவுட் வந்திருக்காது. ஆனால், இப்பிடி தங்கமலை ரகசியம் மாதிரி கடிதத்தை மறைச்சதால, அதில அப்பிடி என்னதான் எழுதியிருக்கும் எண்டு பட்சி தோண்டத் தொடங்கிட்டுது. அப்பிடித் தேடேக்கதான் ஒரு தகவல் வெளி யால வந்திச்சுது. கிரவுண்ட் கட்டுறது போக பண்ணையில மிச்சமுள்ள காணியை தென்னிலங்கையில் உள்ள தனியார் நிறுவனம் ஒண்டுக்கு குடுக்கிறதுக்குத் தான் உந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கு. கடிதத்தில நேரடியா அப்பிடியொண்டும் போடுப்படேல. ஆனால், மேல்மட்டக்காரருக்கு ரெலிபோனில அப்பிடித்தான் குடுக்கப்போறமெண்டு கவர்னர் சொல்லியிருக்கிறார். இதாலதான் பிரதம செயலாளரே அழுகிறநிலை வந்திருக்காம்.**

**"உந்தாள் காணியை குடுத்துட்டுப்போயிடும். கடைசியா என்ரை தலையிலையெல்லோ பழி வந்து விழப்போகுது. உப்பிடியான வேலையளைச் செய்யத் தானே அரசாங்கம் சிங்களவனைக் கொண்டு வந்து பிரதம செயலாளரா போட்டது எண்டு தானே கதை வரும். எனக்கும் உந்தப் பண்ணைக்காணி கைமாறுறதுக்கும் சம்பந்தமேயில்லை. செய்யிறது எல்லாம் கவர்னர், ஆனால் கையெழுத்து போடப்போறதும், சனத்திட்ட கெட்டபேர் வாங்கப்போறதும் நான் தானே' எண்டு பிரதம செயலாளர் தன்ர சக அதிகாரியிட்ட அழாத குறையாப் புலம்பியிருக்கிறாராம்.**

**ஏற்கனவே அந்த விதைப்பண்ணையை சுவீகரிக்க வேண்டாமெண்டு பெரும் பிரச்சினை ஒண்டு போய்க்கொண்டிருக்கு. வவுனியா விவசாயிகள் எல்லாரும் அந்தக் காணியை கைமாத்தக் கூடாது எண்டு இப்ப களத்தில இறங்கியிருக்கிற நேரத்தில உள்ளுக்கால இப்பிடியொரு விசயம் போய்க்கொண்டிருக்காம். என்னதான் உந்தக் காணியை கைமாத்துறதெண்டாலும் அதுக்கு இன்னும் மூண்டு வருசம் ஆகும். அதுக்குள்ள இப்பிடியொரு வளமான காணியை தனியாருக்குத் தாரை வார்க்கிற திட்டத்தை மக்களின்ர பிரதிநிதியள் எண்டு சொல்லிக்கொள்ளுறவை தடுத்து நிப்பாட்ட மாட்டினமோ?**



- பட்சி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். ஆரோக்கிய நகர செயற்றிட்டம்

**உலக சுகாதார தினம் இன்றாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

உலக சுகாதார தினமானது அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியம் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலக சுகாதார தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்படுகின்றது. அந்த வகையில் இந்த வருடம் ' அனைவருக்கும் சுகாதாரம்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டுள்ளது. ஒரு நாட்டின் சுகாதாரத்துக்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. அந்த நாட்டில் உள்ள நகரங்கள் பொதுவாக முக்கியமான பங்கை வகிக்கின்றன. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நகரங்கள் ஒரு முக்கியமான பங்காகும். ஏனெனில் அதிகரித்து வரும் சனத்தொகை மற்றும் வளர்ச்சி அடைந்துவரும் உட் கட்டமைப்பு வசதிகள் என்பன முறையான சுகாதாரத்தை அணுகுவதற்கு தடையாக இருக்கின்றது.

உலக சுகாதார ஸ்தாபனமானது பல தசாப்தங்களாக ஆரோக்கிய நகரங்களை உருவாக்குவதில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆரோக்கிய நகர திட்டம் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆரோக்கிய நகரம் என்பது பௌதிக மற்றும் சமூக சூழலினை மேம்படுத்திக் கொள்வதோடு அங்கு வாழும் மக்கள் தமது திறன்களை வளர்த்துக் கொண்டு ஓர் ஆரோக்கியம் மிக்க வாழ்க்கையை தாமாக ஏற்படுத்திக் கொள்வதற்கு வழிப்படுத்துவதொன்றாகும்.

இந்தச்செயற்றிட்டமானது யாழ்.மருத்துவபீடத்தின் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவ அலகின் நேரடி ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலில் யாழ். மாநகரசபை, சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ். மாவட்டச்செயலகம், யாழ். பிரதேசசெயலகம், மாகாணக் கல்வித் திணைக்களம், மேலும் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதான ஒத்துழைப்புடன் "யாழ். ஆரோக்கிய நகர திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டமானது 5 பிரதானமான கருப்பொருள்களான கழிவு முகாமைத்துவ மேம்பாடு, போஷாக்கான உணவு மேம்பாடு, உடல் மற்றும் உள ஆரோக்கிய மேம்பாடு, நீர் மற்றும் சுகாதார மேம்பாடு அத்துடன் தொற்றா நோய்களுக்கான தடுப்பு என்பவற்றை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இது 3 சுற்றுச் சூழல்களான பாடசாலை, பொது இடங்கள், அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றில் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்த வகையில் பாடசாலைகளில் கழிவு முகாமைத்துவ சுகாதார மேம்பாட்டிற்கு பிளாஸ்ரிக் பாவனை அற்ற பாடசாலையை உருவாக்குவதற்காக பயிற்சிப் பட்டறைகளை இந்தத்திட்டம் மேற்கொண்டு வருகின்றது. யாழ். மாநகரசபைக்குள் அடங்கும் 23 பாடசாலைகளில் எமது பயிற்சிகளை நடத்தி உள்ளோம். மேலும் நீர் மற்றும் சுகாதார மேம்பாட்டின் கீழ் பாடசாலைகளில் பெண் மாணவர்களுக்கான மாதவிடாய் சுகாதாரம் எனும் பயிற்சி பட்டறையை வழங்கி வருகின்றோம். மேலும் சில அது தொடர்பான கற்றல் புத்தகங்களை உருவாக்கி விநியோகித்து வருகின்றோம். உடல் மற்றும் உள ஆரோக்கிய மேம்பாட்டுக்காக பாடசாலை மாணவர்கள் மத்தியில் துவிச்சக்கரவண்டி பாவனையை அதிகரிப்பதற்காக கடந்தவருடம் துவிச்சக்கரவண்டி விழிப்புணர்வு பயணம் ஒன்றை நடத்தி தொடர்ந்து அதனை மேம்படுத்துவதற்காக மாணவர்கள் துவிச்சக்கரவண்டியில் பயணிப்பதற்கான சூழலை உருவாக்குவதில் ஆர்வமாக செயற்பட்டு வருகின்றோம். மேலும் பாடசாலைத் தோட்டம் என்ற எண்ணக்கரு ஊடாக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். பாடசாலையில் மாணவர்களின் போசணையை அதிகரித்துக் கொள்ள சுகாதாரமான சிற்றுண்டிச்சாலைகளை உருவாக்குவதற்கு திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

இவ்வாறு நாம் எமது ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம். எமது இந்தச் செயற்பாடுகளை அலுவலகங்கள் மற்றும் பொதுஇடங்களில் மேற்கொள்வதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றோம். நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலம் மட்டுமே எமது நகரை ஓர் ஆரோக்கியம் மிக்க நகராக மாற்றமுடியும். எம் ஒவ்வொரும் எமது நகரை ஆரோக்கியத்தின் பாதையில் கொண்டு செல்வதற்கான சிறிய முயற்சியும் எமது நகரத்தின் ஆரோக்கியமான பயணத்துக்கு வழிவகுக்கும்

ஆரோக்கியமான மக்கள் , ஆரோக்கியமான நகரம்.
ஆரோக்கியமான நாடு.

# ஆர்.சி.பி. அணியை நேற்று துவைத்தது கொல்கத்தா!



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், ஆர்.சி.பி. அணியை 81 ஓட்டங்களால் மிகமிக இலகுவாக வீழ்த்தியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.

நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூர் அணித் தலைவர் டுபிளஸி கொல்கத்தா அணியை துடுப்பெடுத்துமாறு அழைத்தார். இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு சிறப்பான ஆரம்பம் அமையவில்லை. ஒரு முனையில் துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மறுமுனையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய ரஹ்மனுல்லா குர்பாஸ் நிதானமான ஆட்டத்தை வழங்கி அணியின் மீட்சிக்காகப் போராடினார். இவர் 44 பந்துகளில் 57 ஓட்டங்களைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து மத்திய வரிசையில் களமிறங்கிய ரிங்கு சிங் மற்றும் சர்துல் தாகூர் ஆகியோர் கொல்கத்தா பந்து வீச்சாளர்களை புரட்டிப் போட்டனர். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 103 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். ரிங்கு சிங் 3 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலாக 33 பந்துகளில் 46 ஓட்டங்களையும், எதிர்பாராதவகையில் அதிரடியான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய தாகூர் 3 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகள் உள்ளடங்கலாக வெறுமனே 29 பந்துகளில் 68 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை 204ஆக உயர்த்தினர். பந்துவீச்சில் கரன் சர்மா, டேவிட் வில்லி தலா 2 விக்கெட்டுக்களையும் சிராஜ், ப்ரேஸ்வெல், பட்டேல் தலா ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினர்.

205 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு கோலி மற்றும் டுபிளஸி இணை 44 ஓட்டங்களைப் பகிர்ந்து சுமாரான ஆரம்பத்தை கொடுத்த போதிலும் கொல்கத்தா அணியின் மாஜாயால சுழற்பந்துவீச்சாளர்களான சுனில் நரைன் மற்றும் வருண் சக்கரவர்த்தியின் சுழலில் சிக்கி அடுத்தடுத்து பவிலியன் திரும்பினார்கள். ஆர்.சி.பி.யின் தடுமாற்றமும் நரைன், வருணின் விக்கெட் வேட்டையும் தொடர்ந்து. முடிவில் 123 ஓட்டங்களை மட்டுமே பெற்று படுதோல்வியடைந்தது ஆர்.சி.பி.

வருண் சக்கரவர்த்தி 15 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், அறிமுகப் போட்டியில் பந்துவீசிய சுயாஸ் சர்மா 3 விக்கெட்டுக்களையும், கொல்கத்தா அணிக்காக 150ஆவது ஆட்டத்தில் விளையாடிய சுனில் நரைன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சர்துல் தாகூர் தேர்வானார். (ம-ரி1)






வரலாற்றுச் சிறப்புமிக்க கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை சிறப்புற இடம்பெற்றது. பொங்கல் உற்சவத்தில் நூற்றுக்கணக்கான அடியவர்கள் தமது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். (ச-113)



கிரிசலிஸ்', 'சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை' நிறுவனங்களின் அனுசரணையில் இலவச சட்ட உதவி தொடர்பான நடமாடும் சேவை யாழ்ப்பாணம் சர்வோதய மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. (ம)



## இடிந்து வீழும் ஆபத்தில் திருவையாற்றுப் பாலம்!

### புனரமைப்புச் செய்யுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி திருவையாறு வில்சன் வீதியிலுள்ள சரவணாஸ் பாலத்தின் அத்திபாரம் எவ்வேளையிலும் இடிந்து விழும் ஆபத்தான நிலையில் காணப்படுகிறது. அதனால் பாலத்தினூடாக அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது எனப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

திருவையாறு பிரதேசத்திலிருந்து விவசாய நடவடிக்கைகளுக்காக இந்த வீதியூடாக உழவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் தினமும் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

குறித்த பாலம் இரணைமடுக்குள புனரமைப்பின் ஒருபகுதியான 'இபாட்' திட்டத்தின் கீழ் சில வருடங்களுக்கு முன்பு புனரமைப்புச் செய்யப்பட்டது. ஆயினும் மேலோட்டமாக சீரின்றி புனரமைப்புச் செய்யப்பட்டு பணிகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன. தற்போது இந்தப் பாலம் எவ்வேளையிலும் இடிந்து விழும் ஆபத்தான நிலையில் காணப்படுகிறது. எனவே குறித்த பாலத்தில் விபரீதம் ஏதும் நிகழா வண்ணம் உடனடியாக பாலத்தை புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தோற்றுப்போன இணக்க அரசியல்

ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கொழும்பு அரசுகளுடன் எப்போதும் 'இணக்க அரசியல்' செய்துவருபவர். தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் தரப்புக்களை அவர் கடுமையாகச் சாடுவதுடன் 'இணக்க அரசியல்' ஊடாகவே எதையும் சாதிக்கமுடியும் என்று திரும்பத்திரும்பக் கூறுபவர். பௌத்த – சிங்கள அரசுகளுக்கு போர்க்காலத்தில் டக்ளஸ் தேவானந்தா முட்டுக் கொடுத்திருந்தார். தமிழர் தரப்பிலிருந்து அந்தத் தரப்பையே காட்டிக்கொடுக்க ஒருவர் இரு கரங்களையும் வீசிக்கொண்டு வரும்போது அதை சிங்கள – பௌத்த பேரினவாத அரசுகள் அணைக்காமல் இருக்குமா? அப்போது தொடக்கம் இன்று வரையில் அவர் சிங்கள அரசுகளுடன் 'ஒட்டிக்கொண்டு' இருந்துதான் அரசியல் செய்கிறார். அவர் தனது வசதிகளுக்காகவும் சொகுசுக்காகவும் எதையும் செய்துவிட்டுப் போகலாம். அதை யாரும் கேள்விக்குட்படுத்தமுடியாது. ஆனால், இணக்க அரசியல்தான் சரியான பாதை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கும் அவரால் இப்போது என்ன செய்ய முடிந்திருக்கின்றது?

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் அடித்துடைக்கப்பட்டிருந்தன. அது தொடர்பான சீற்றம் தமிழர் தாயகத்தில் எழுச்சிபெற்றிருந்த நிலையில், சிங்கள – பௌத்த பேரினவாத அரசு, தமிழர்களான டக்ளஸ் மற்றும் ஜீவன் தொண்டமானைப் பயன்படுத்தி தணிக்கச் செய்து ஆறப்போட்டிருக்கின்றது. தமிழர்களின் கையாலேயே அவர்களின் கண்களைக் குத்த வைத்தது பௌத்த–சிங்கள பேரினவாத அரசு. 'நாங்கள் வந்து சிலைகளை மீளமைக்கின்றோம்' என்று இரு அமைச்சர்களும் முழங்கினர். அதற்கிடையில் ஆலய நிர்வாகத்தின் முயற்சியால் சிலைகளை அமைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு அது நேர்த்தியாக நடைபெறவிருந்த நிலையில், அதையும் குழப்பியடித்தனர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியினர். இறுதியில் அமைச்சர்கள் சென்றும் அங்கு சிலை வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

இதன் பின்னர் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் டக்ளஸ் தேவானந்தா 'பொருமியிருக்கிறார்'. 'வெடுக்குநாறி விவகாரத்தில் சிலைகள் உடைக்கப்பட்டபோது ஏற்பட்ட உணர்வுகளைவிட, கடந்த சில தினங்களில் வெளிப்படுத்தப்பட்ட சில தரப்புக்களின் வியாக்கியானங்கள் எமக்கு ஏற்படுத்திய உணர்வுகள் ஆழமானவை' என்று குறிப்பிட்டிருக்கின்றார். அத்துடன் 'வெடுக்குநாறி விவகாரத்தில் நீதிமன்றம் எந்தவிதமான தடை உத்தரவுகளையும் வழங்காதபோதிலும், வழக்கு நிலுவையில் இருப்பதைக் காரணம் காட்டி, உடைக்கப்பட்ட சிலைகளை மீளப் பிரதிஷ்டை செய்வதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதேவேளை, குருந்தூர் மலையில் விகாரை அமைப்பதற்கு இடைக்காலத் தடையை நீதிமன்றம் விதித்திருக்கின்ற நிலையிலும் விகாரை கட்டி முடிக்கப்பட்டிருப்பதை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன. இவ்வாறான சம்பவங்கள் தமிழ் மக்களை மாத்திரமல்ல, நியாயமாகவும் நடுநிலையாகவும் சிந்திக்கும் அனைவருக்கும் வேதனையை ஏற்படுத்தும். இன்றைய அமைச்சரவையில்கூட உண்மை மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விவாதத்துக்கு வந்திருக்கிறது. இவையெல்லாம் அர்த்தபூர்வமானவையா என்ற எண்ணத்தினை நடக்கின்ற சம்பவங்கள் தோற்றுவிக்கின்றன' என்றும் அவர் கூறியிருக்கின்றார்.


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்த கருத்துக்கள் உணர்வுபூர்வமானவைதான். ஆனால், அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்ததால் மாத்திரம் என்ன நடந்துவிட்டது? இந்த விடயத்தை ஆறப்போட்டு – அமரப்போட்டு இழுத்தடிக்கும் வகையிலேயே ஜனாதிபதி ரணில் நடந்துகொண்டிருக்கின்றார். அவர் அதில் கைதேர்ந்தவர் என்பது உலகறிந்த உண்மை. 'புத்தாண்டின் பின்னர் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேச்சு நடத்துவோம்' என்று அரச தரப்புக் கூறியதும் டக்ளஸும் அடங்கிப்போயிருக்கின்றார்.

இணக்க அரசியல் ஊடாகத்தான் சாதிக்க முடியும் என்றால், கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடுக்குநாறி மலைக்குச் சென்றபோது சிலைகளை வைத்திருக்கவேண்டும். அது முடியாதபோதே அவரது இணக்க அரசியல் பாதை தோற்றுவிட்டது என்பதை ஏற்றுக்கொண்டு, சிங்கள – பௌத்த பேரினவாத அரசுக்கு முட்டுக்கொடுக்காமல் அமைச்சுப் பதவியைத் துறந்திருக்கவேண்டும். அமைச்சரவைக் கூட்டத்திலும் ஒரு முடிவும் எடுக்கப்படாமல் விடயம் ஆறப்போடப்பட்டபோதாவது கொந்தளித்திருக்கவேண்டும். அதையெல்லாம் விடுத்து இன்னமும் அமைச்சுப் பதவியை இறுகக் கட்டி வைத்திருப்பதானது, அவரது அரசியலும், கொள்கையும் தமிழ் மக்களின் நலனுக்கானதல்ல, மாறாக அது ஒரு தனிமனிதரின் சுயநலன் பாற்பட்டது என்பதையே காட்டுகின்றது.

### நாளொரு நல்வார்த்தை

" ஒரு செயலைச் செய்வது வெற்றி அல்ல, அதை மகிழ்ச்சியாக செய்வதே வெற்றி. எதையுமே சிறு புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள் "

– அன்னை தெரேசா



# தேர்தல் நிதி தொடர்பில் பதிலளிக்க மறந்த ரணில்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.7**

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான பணத்தை வழங்கக்கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிய கடிதத்துக்கு இதுவரை எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.**

நிதி அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி ஒரு மாதம் நிறைவடையவுள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

தேர்தலுக்குத் தேவையான நிதி தொடர்பில் கலந்துரையாடுவதற்கு உள்ளூராட்சி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் சந்தர்ப்பம் கோரப்பட்டபோதும், இதுவரை அதற்கும் எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

தேர்தலை நடத்துவது தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தது.

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழு கூடி இது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (எ-இ)

# கசப்பு மருந்து உண்டாலே நாட்டின் நோய் தீருமாம்!

## *விளக்கம் கொடுக்கிறார் சியம்பலாபிட்டிய*

கொழும்பு, ஏப்.7

நாடு பொருளாதாரப் பாதிப்பு என்ற கொடிய நோயை எதிர்கொண்டுள்ளது. நோய் குணமடைய வேண்டுமானால் கசப்பான மருந்தை நிச்சயம் பருகவேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை, செயற்றிட்டங்கள் கடந்த காலங்களைக் காட்டிலும் தற்போது வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் நாடு மிக மோசமான பொருளாதாரப் பாதிப்பு என்ற கொடிய நோயை எதிர்கொண்டுள்ளது. நோயைக் குணப்படுத்தக் காலம்கடந்த பின்னரே சர்வதேச நாணய நிதியம் என்ற மருத்துவரை நாடியுள்ளோம். நாணய நிதியத்தின் நிபந்தனைகள் கடுமையாகக் காணப்பட்டாலும், நோயைக் குணப்படுத்தக் கசப்பான மருந்தைப் பருகவேண்டும்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள அரசாங்கம் கடந்த 7 மாத காலமாக எடுத்த கடுமையான தீர்மானங்களின் பயனை நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ளார்கள். எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைந்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்காக முன்னெடுக்கப்படும் சகல பேச்சுவார்த்தைகளையும் நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவோம். நாட்டு மக்கள் சிறந்த முறையில் சிந்திக்கிறார்கள். ஆனால், அரசியல்வாதிகள் பாரம்பரியமான அரசியல் கோணத்தில் இருந்துகொண்டு கருத்துரைக்கிறார்கள் - என்றார். (எ-இ)

### நாளை

08.04.2023

சனிக்கிழமை

பங்குனி 25

சுபநேரம் : 03.07 - 04.37

ராகுகாலம் : 09.07 - 10.37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப் பண்ணைகளால் அடிக்காதீர்கள் வயிற்றில்!

## அருட்தந்தை யூஜின் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஏப். 7**

**பாரம்பரிய மீன்பிடித் தொழில் பாதிக்கப்படும் வகையில் வடக்கு மாகாணத்தை கடலட்டைப் பண்ணைகள் ஆக்கிரமித்துவருகின்றன. அவற்றை அகற்றி கடற்றொழிலாளர் வாழ்வாதாரத்தைக் காக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

இவ்வாறு கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை யூஜின் பிரான்சிஸ் அடிகளார் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தொடர்பான திணைக்கள அதிகாரிகளுக்கும் கிராம குழுக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்;

எம் கண்முன்னே குடாக்கடல் நீரேரிப் பகுதியில் சட்டவிரோதமாக கடலட்டைப் பண்ணைகளை அமைத்து எமது வளங்களை வெளிநாட்டு நிறுவனங்கள் சூறையாடுகின்றன. அதனால் இந்தக் கடற்பரப்புகளில் காணப்படும் கண்டல் தாவரங்கள் அழிவடைவதுடன் மீனின பல் வகைமையும் பாதிப்புறுகின்றன.

இந்த நிலை தொடருமாயின் குடாக் கடலை நம்பிவாழும் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை முற்று முழுதாக இழப்பர்.

எனவே இலாப நோக்கில் எமது வளங்களை சூறையாடாது - கடற்றொழிலாளரின் வயிற்றில் அடிக்காது சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை அகற்றுவதற்கான நடவடிக்கையை உரிய திணைக்களங்கள் மேற்கொள்ள வேண்டும். (ச-இ)



காத்தவராயன் கூத்து

# மேடையேற்றமும் பிரதி வெளியீடும்

யாழ்ப்பாணம், ஏப். 7

வடமராட்சி மண்ணில் வாய்மொழி மரபில் நெடுங்காலமாக வழங்கி வந்த காத்தவராயன் கூத்து மேடையேற்றமும் அளிக்கைப் பிரதி வெளியீடும் கடந்த திங்கட்கிழமை நாகர்கோவில் கண்ணகை அம்மன் ஆலய முன்றிலில் இடம்பெற்றது.

நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன், சிறப்புரையை தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார், அறிமுக உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் சி.செரஞ்சன் ஆகியோர் நிகழ்த்தினர். (ச-66)

# வவுனியாவில் நால்வர் சாவு; காரணத்தைக் கண்டறிக

## பொலிஸ்மா அதிபருக்கு செல்வம் எம்.பி. கோரிக்கை

மன்னார், ஏப். 7

வவுனியாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிரிழப்பு தொடர்பில் உண்மைத் தன்மையை வெளியிடுங்கள் என வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது கடந்த மாதம் வவுனியா குட்ஷெட் வீதியிலுள்ள வீடொன்றில் நால்வர் அடங்கிய குடும்பத்தினர் சடலமாக மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் மக்களிடையே அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்த மர்மமான மரணம் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் வெளியாகவில்லை. உயிரிழப்புக்கான காரணமும் கண்டறியப்படவில்லை.

எனவே இந்த விவகாரத்தில் கவனம் செலுத்தி நீதியைப் பெற்றுத் தருவதுடன் உண்மைத் தன்மையையும் வெளியிடுங்கள்- என்றுள்ளது. (ச-213)



# தென்கொரியாவில் வேலைவாய்ப்புகள்

கொழும்பு, ஏப். 7

இலங்கை இளைஞர்களுக்கு தென்கொரியாவில் அதிகளவில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது என தென்கொரியாவின் பிரபல நிறுவனமான 'ஹுண்டாய்' தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு வருகை தந்திருந்த குறித்த நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்சவை கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது இலங்கையிலுள்ள திறமையான இளையோரை எமது நாட்டுக்கு அழைத்து தொழில்பயிற்சிகளை வழங்குவதுடன் தென்கொரியாவில் வேலைவாய்ப்புக்களை வழங்கவும் எதிர்பார்க்கிறோம். கொரிய மொழி, கலாசாரம் போன்றனவும் இதன்மூலம் புரிந்துகொள்ள ஏதுவாக அமையும் என 'ஹுண்டாய்' நிறுவன அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (ச-இ)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஏப். 7

சங்கானை மருத்துவமனையின் நோயாளர் நலன் புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருத்துவமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 7

இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 80ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தங்கப்பதக்கத்துக்கான மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப்போட்டி, புனாவோடை அராலி தெற்கு, வட்டுக்கோட்டை சவாரி விடத்தையில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணி முதல் இடம்பெறவுள்ளது. (ஒ-14)

# பத்மநாபாவின் தலைமையிலே ஈ.பி.ஆர்.எல்.எப். பயணிக்கிறது

## சிவசக்தி ஆனந்தன் பெருமிதம்

வவுனியா, ஏப். 7

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) தலைவர் பத்மநாபாவின் தலைமையில் நாங்கள் பயணித்தோம் என்பதிலும் தொடர்ந்து பயணிக்கிறோம் என்பதிலும் எமது கட்சி பெருமிதம் கொள்கிறது. இவ்வாறு தெரிவித்தார் அந்தக்கட்சியின் செயலாளர் ந. சிவசக்தி ஆனந்தன். பத்மநாபாவின் சிலை வவுனியாவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறக்கப்பட்டபின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் இறுதிப் பகுதியிலிருந்தே இந்த நாட்டை தனிச்சிங்கள நாடாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் கட்டம்கட்டமாக கட்டவிழ்த்து விடப்பட்டன. இலங்கையின் ஒருங்கிணைக்கப்பட்ட பாட்டாளிவர்க்கமான தோட்டத் தொழிலாளர்களிடம் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஒடுக்குமுறையானது வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள்மீதும் மேற்கொள்ளப்பட்டது.

இதனை எதிர்த்து தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையை வலியுறுத்தி மலையகத் தமிழர்களையும் ஒருங்கிணைத்து போராடுவதன் மூலமே முழுமையான தேசிய இன விடுதலையை வென்றெடுக்க முடியும் என்பதிலும் அதன் அடுத்த கட்டமாக இலங்கையை ஒரு சோசலிச நா[illegible] யும் என்பதிலும் தோழர் பத்மநாபா உறுதியாக இருந்தார்.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான போராட்டத்தின் செல்நெறியை ஒருங்கிணைப்பதற்கும் எமது மக்கள் தொடர்ச்சியாக முகங்கொடுத்துவந்த கொடுமைகளையும் அழிவுகளையும் நிறுத்தி மக்களை ஆசுவாசப்படுத்துவதற்கும் இந்தியஇலங்கை ஒப்பந்தத்தை ஏற்று அதன் விளைவாக தோற்றுவிக்கப்பட்ட மாகாணசபை முறைமையை ஏற்று, இணைந்த வடக்கு -கிழக்கு மாகாண அரசாங்கத்தைத் ஸ்தாபிப்பதில் முன்னின்று செயற்பட்டார். அதனை எம் மக்களுக்கான நிரந்தரத் தீர்வாக அவரோ எமது கட்சியோ ஒரு போதும் கருதவுமில்லை கூறவுமில்லை.

சர்வதேசரீதியில் ஒடுக்கப்பட்ட தேசிய இனமக்களின் விடுதலையை அங்கீகரித்து அவர்களின் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்த சர்வதேச போராளியாகவும் அவர் திகழ்ந்ததால் ஒடுக்கப்பட்ட தேசிய இன விடுதலைக்காகப் போராடிய அனைத்துத் தலைவர்களுடனும் அவருக்கு நெருக்கமான உறவு நிலவியது. ஈழ மக்களின் விடுதலையைப் பொறுத்தவரை இந்தியாவின் தலையீடு இன்றி எத்தகைய தீர்வும் சாத்தியமற்றது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டிருந்தார். எமது கட்சியின் இன்றைய நிலைப்பாடும் அதுவே. இவ்வாறானதொரு நிலையில் ஒரு தீர்க்கதரிசியின் தலைமையில் நாங்கள் பயணித்தோம் என்பதிலும் தொடர்ந்து பயணிக்கிறோம் என்பதிலும் எமது கட்சி பெருமிதம் கொள்கிறது - என்றார். (ஒ-14.110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 21, புன்னாலை வீதி, ஆதன இல. 561, 561A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சிவக்கொழுந்து வேலாயுதம்பிள்ளை கந்தையாவும் பெண் கோமதியம்மாவும் என யாழ் மாநகரசபை ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் காரைநகர். பாலாவோடை தற்போது கொழும்பு - 13, புதுச் செட்டித்தெரு, 50ம் இலக்கம், சண்முகம் ஆறுமுகம் இராஜலிங்கம் 2004.03.10 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் முகதாவில் உறுதி இல. 7233 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் காரைநகர் பாலாவோடை, தற்போது கொழும்பு - 13, புதுச்செட்டித்தெரு 50ம் இலக்கம் இராஜலிங்கம் அறிவழகனுக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் இராஜலிங்கம் அறிவழகன் அவர்கள் 2019.09.30 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்தில்குமரன் முகதாவில் உறுதி இல 4357 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் அமிர்தலிங்கம் முரளிதரன் அவர்களுக்கு வழங்கியுள்ளார். பின்னர் இராஜலிங்கம் அறிவழகன் அவர்களால் 2020.02.03 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்தில்குமரன் முகதாவில் உறுதி இல 4590 ஆம் இலக்க திருத்தல் உறுதி மூலம் தேசிய அடையாள அட்டை திருத்தம் பொருட்டு அமிர்தலிங்கம் முரளிதரன் அவர்களுக்கு வழங்கப்பட் டுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற் பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை "ஆலடி" நிலப்பரப்பு 8 குழி 12.05 பன்னிரண்டு தசம் சைபர் ஐந்தும் கிணறும், வைரவர் கோவிலும், பயிர்வகைகளும்.

**கிழக்கு** : மானிப்பாய் வீதியும் கணபதிப்பிள்ளை ஜெயக்குமாருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்.
**வடக்கு** : கணபதிப்பிள்ளை பேரானந்தத்தின் ஆதனம்
**மேற்கு** : குளம்
**தெற்கு** : கணபதிப்பிள்ளை ஜெயக்குமாருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதலடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை அமிர்தலிங்கம் முரளிதரன் தமது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது அமிர்தலிங்கம் முரளிதரன் என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR/39602)AH-1

# மரண அறிவித்தல்

மலர்வு 10 - 12 - 1945



உதிர்வு 02 - 04 - 2023

## சோமசுந்தரம் கனகாம்பிகை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட சோமசுந்தரம் கனகாம்பிகை கனடாவில் கடந்த (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மயிலாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நடராசா (ஆசிரியர்), சாரதாதேவி (முன்னாள் ஊழியர், யா/ மாநகரசபை), சுசிலாதேவி (முன்னாள் ஊழியர், சுகாதாரத்திணைக்களம்) மற்றும் மோகனதாஸ் (கனடா), குகனேஸ்அம்மா (நல்லூர்), ராகினி, தேவராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) மதுசாளினி, திபாகரி (கனடா), பிரபாகரி (கனடா), வன்மீகநாதன் (கனடா), மாலதி (அனலைதீவு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கஜலக்சி, பிரதச்சனா, கிரிசாந் ஆகியோரின் ஆசை பெரியம்மாவும், றம்மியா, திவ்வியகன், சின்மயி ஆகியோரின் பெரியம்மாவும், சரண்யன், கிரிசன், கேசவி, பிரியங்கா, தர்சிகா, பிரமிகா,ஒஸ்மன், துவாரகன் ஆகியோரின் அன்பு மாமியும் தேவராஜா, நீதிராஜா, மகாலிங்கம், சிறிகாந்தவேல், லலிதா, பவானி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**107, நாயன்மார் வீதி, நல்லூர்.** (CS 24286) (K-1) **076 691 0251 (T.ராகினி)** **தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா கடந்த (04.04.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பண்டாரி சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு, ஆறுமுகம், வேலுப்பிள்ளை, சதாசிவம், செல்லம்மா மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, பரமநாதன், செல்லர், பொன்னாச்சி, லட்சுமி, ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற குகராசா மற்றும் பவளரதி (ஜேர்மனி), இரஞ்சிதமலர் (நீர்வேலி), குகனேஸ்வரன் (பிரான்ஸ்), சுகந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகநாதன் (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (நீர்வேலி), கௌதினி (பிரான்ஸ்), ஜீவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசாந் (ஜேர்மனி), நிசாந் (ஜேர்மனி), டிலக்‌ஷன் (பல்கலைக்கழகம் - யாழ்), துவாரகி (யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), சுறஜா (பிரான்ஸ்), கபிஷா (பிரான்ஸ்), அஸ்விகா (பிரான்ஸ்), பூர்விகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி தெற்கு, நீர்வேலி.** (CS 39882) (N-1) **தகவல்: குடும்பத்தினர்** **மண்ணில் 16.03.1934** **விண்ணில் 04.04.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி கிளை முகாமையாளர் பயிற்சியாளர்களை நியமித்தல்

**மேற்குறிப்பிடும் பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகைமையுள்ள ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. பதவி : **கிளை முகாமையாளர் (பயிற்சியாளர்)**
2. வயதெல்லை : 18 - 45
3. தகைமை : கூட்டுறவுப்பணியாளர் (சாதாரண தரம்) தராதரப்பத்திரம் க.பொ.த (சாதாரணம்) 02 அமர்வுகளுக்கு மேற் படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம். சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களில் சித்தியும் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்ப முடிவுதிகதி: **25.04.2023**

விண்ணப்பப் படிவங்களை ரூபா 10 /- செலுத்தி தலைமைக் கந்தோரில் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப் பங்கள்யாவும் **பொது முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம். நீர்வேலி** என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். **தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.** விண்ணப்பத்துடன் தகைமைச் சான்றிதழ்களின் நிழல்பிரதிகள் இணைக்கப்படவேண்டும்.

**பொது முகாமையாளர்**
**நீர்வேலி.**
**13.03.2023**

(CR.3910) (N-1)

## பெயர் மாற்றம்

1992 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி
யா / போதனா வைத்தியசாலையில் பிறந்த
**அருளானந்தம் துவாரகா**
ஆகிய நான் இன்று தொடக்கம்
**அருளானந்தம் துஸ்யங்கா** என
பெயர் மாற்றம் செய்கின்றேன் என்பதனை இலங்கை
ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

**அ.துஸ்யங்கா**

(cs.49883) (N-1)

## பண்டிதர் க.பேரம்பலம் அறக்கட்டளை (PCPT)

### பதிவு இல:- Trustee 02 172, 173

### மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பம்

வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்குகின்ற எமது அறக்கட்டளையானது வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களின் கல்வித்தரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக அவர்களின் கற்றல் செயற்பாடு முதற்கொண்டு பராமரிப்புச் செலவு உள்ளடங்கலாக அனைத்துச் செலவுகளையும் பல்கலைக்கழகம் வரை பொறுப்பேற்று செயற்படுவதை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

**அதன் அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளின் கீழ் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

01. மாணவர்கள் கிளிநொச்சி. மன்னார். முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது.
02. விண்ணப்பதாரர்கள் ஆண் மாணவர்களாக இருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பதாரர்கள் தற்போது தரம் 09, 10 இல் கல்வி கற்க வேண்டும்.
04. எமது விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றல் வேண்டும்.
05. அறக்கட்டளையின் ஒழுக்க விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
06. விண்ணப்பங்கள் யாவும் தாமாகவே தயாரிக்கப்பட வேண்டும்.

**விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 30.04.2023 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**குறிப்பு:-** மாணவர்கள் அறக்கட்டளையினால் இறுதியாகத் தெரிவு செய்யப்படுவார்கள். அறக்கட்டளையின் முடிவே இறுதி முடிவாகும்.

Mr.C.P. Sivarajah
ஸ்தாபகர்,
பண்டிதர் க.பேரம்பலம் அறக்கட்டளை (PCPT)
35/1, பழைய பொலிஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.
074 284 4262
தலைவர்
பண்டிதர் க.பேரம்பலம் அறக்கட்டளை (PCPT)

Mrs.A. Sivavani
சட்ட ஆலோசகர்,
பண்டிதர் க.பேரம்பலம் அறக்கட்டளை (PCPT)
075 711 4480,
E-mail:- ssvani8@gmail.com
செயலாளர்
பண்டிதர் க.பேரம்பலம் அறக்கட்டளை (PCPT)

(CS/24181) AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 06 . 1943



மறைவு 06 . 04 . 2023

### நவரட்ணம் லட்சுமி

உயரப்புலம். ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் லட்சுமி அவர்கள் நேற்று (06.04.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா நவரட்ணத்தின் அன்பு மனைவியும், சாந்தலட்சுமி (கனடா). சாந்தீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்கினேஸ்வரன் (கனடா). சுசிலா ஆகியோரின் அன்பு மாமியாரும், திவாகரன்- மாதுரிஜா (கனடா). வசிகரன்- லக்சிகா (கனடா).பிரதீபன்- மிதுலா (கனடா). சுஜிகரன் (கனடா). நிசாந்தன். நிரூபிகா. நிறோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், கனடாவைச் சேர்ந்த விதுபன். அஞ்சனா. மேகனா. யுவன். சிந்துஜா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2023) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று. பூதவுடல் கரயாம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 102 8774**
**(சாந்தீசன்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 - 05 - 1943



மறைவு 06 - 04 - 2023

### ஐயம்பிள்ளை பாலசுப்பிரமணியம்

**( ஓய்வுபெற்ற ஆயுர்வேத வைத்தியர்)**

வேலணை கிழக்கைச் சேர்ந்த டாக்டர் ஐயம்பிள்ளை பாலசுப்பிரமணியம் நேற்று (06.04.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியர் ஐயம்பிள்ளை சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், நாகரெத்தினத்தின் அன்புக் கணவரும், அன்பரசி, அன்பழகன் (கனடா). சுந்தரேஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்- ஊர்காவற்துறை). நந்தினி, அமரர் கோபிநாத் ஆகியோரின் தந்தையும், கிருஸ்ணபரலன் (பூாலன்- ஆசாரி). கலைவாணி (கனடா). சிவனருட்செல்வி (ஆசிரியர்). சுதாகரன் ஆகியோரின் மாமனாரும், கஜனி, சஹானா, தரணிதரன், அபிநீதன், திஸ்ஸநீதன், பானுஜன், பானுஜா ஆகியோரின் பேரனும், Dr.நவரத்தினம் (நடனமுருகன்), Dr.சோதிதாஸன், இந்துமதி, சிவசோதி, அருட்சோதி, மணிமாறன், இயந்திராதேவி, அமரர் பரமேஸ்வரி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2023) வெள்ளிக்கிழமை 61, இலந்தைகுளம் வீதி, அரியாலையில் முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் வேலணை இல்லத்தில் (தங்கம் வைத்தியசாலை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக தாழையங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 980 4983
077 647 7033

(CS24335) (J-1)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருக்குவலையை ஒழித்து வாழ்வாதாரத்தைக் காக்க!

## கடற்றொழில் அமைச்சரிடம் மீனவர் சங்கங்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 7**

**சுருக்குவலை மீன்பிடி உள்ளிட்ட சட்டவிரோதமான கடற்றொழிலைத் தொடர்ச்சியாகக் கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் அமைச்சர் முன்வரவேண்டும். எமது வளங்களைப் பாதுகாக்க வேண்டும்.**

இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர்கள் இந்தக் கோரிக்கையை கூட்டாக முன்வைத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வடமராட்சி கடற்பரப்புகளில் தற்போது சுருக்குவலைத் தொழில் தீவிரமாக இடம்பெற்று வருகிறது. இதனால் அதிகளவிலான சிறிய மீன்கள் அந்த வலைகளில் அகப்படுவதால் பாரம்பரிய மீன்பிடித் தொழில் பாதிக்கப்படுகிறது - சந்தை வாய்ப்பு இழக்கப்படுகிறது. அத்துடன் சுருக்குவலைத் தொழிலில் ஈடுபடுவோர் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், டைனமற் அடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் காரணமாக கடல் வாழ் உயிரினங்களின் பல்வகைத் தன்மை அழிவடைகிறது. அண்மையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சட்டவிரோத சுருக்குவலைத் தொழிலைக் கட்டுப்படுத்துவதாக உறுதியளித்தார். ஆகவே இந்தச் சட்டவிரோத சுருக்குவலைத்தொழிலைக் கட்டுப்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-20-125)



## திருமுறை விழா

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் திருமுறை விழா கந்தர்மடத்திலுள்ள பேரவை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேரவையின் தலைவர் ஈசான சி.சக்திகிரீவன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஆசியுரையை தருமை ஆதீன திருச்சி மௌனமட மற்றும் திருக்கேதீச்சர மடத்தின் ஸ்ரீலஸ்ரீ மீனாட்சி சுந்தரத் தம்பிரான் சுவாமிகள், சிறப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர் கலாநிதி. ம.பாலகைலாசநாதசர்மா ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து சைவ உலகில் தமிழிசையை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் இசைக் கலைமணி சிவஸ்ரீ.விஸ்வப்பிரசன்ன சிவாச்சாரியார் 'திருநெறிய தெய்வீக இசையரசு' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். நிகழ்வின் இறுதியில் சிவஸ்ரீ.விஸ்வப் பிரசன்ன சிவாச்சாரியார் தலைமையிலான குழுவினரின் சிறப்புப் பண்ணிசைக் கச்சேரி அரங்கேறியது. (ச-66)

## கப் வாகனம் ஓட்டோ விபத்தில் மூவர் சாவு!

கொழும்பு, ஏப். 7

கப் வாகனம் ஓட்டோ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று நபர்கள் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து வெல்லவாயதனமல்வில பிரதான வீதியின் நுகயாய பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த 44 வயதான பொலிஸ் அதிகாரி, 42 வயதான அவரின் மனைவி மற்றும் 70 வயதான தந்தை ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் கப்ரக வாகன சாரதி கைது செய்யப்பட்டார். சாரதியிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அவர் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தினார் எனவும் அவரிடம் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை எனவும் வெல்லவாய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14)

## 'மலையகம் 200' இணையவழி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 7

சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் "மலையகம் 200" நிகழ்ச்சித் திட்டத்தின் "வரலாற்று விம்பங்களும் மலையக வாழ்வியலும்" எண்ணக்கருவிலான இணையவழி நிகழ்ச்சித் தொடரின் 2 ஆவது உரையாடல் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

"இடம்பெயர்ந்து மலையகத்துக்கு வெளியில் வாழும் மலையகத்தவரின் எதிர்காலம்" எனும் தலைப்பில் எழுத்தாளர் மற்றும் வரலாற்று ஆய்வாளரான சரவணன் கோமதி நடராசாவை வளவாளராகக் கொண்டு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. சூம் செயலி இலக்கம் 838 0925 0355, கடவுச்சொல் 2023 என்பவற்றினூடாக நிகழ்வில் இணைந்து கொள்ளலாம். (ஒ-14-159)

## பயணிக்க ஏதுவான நாடாக பெயரிடப்பட்டது இலங்கை!

கொழும்பு, ஏப்.7

இந்த ஆண்டு பயணம் செய்வதற்கு மிகவும் பொருத்தமான உலக நாடுகளில் இலங்கை சேர்க்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை நிபுணர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் பெயரிடப்பட்டுள்ள 23 நாடுகள் பட்டியலிலேயே இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பேர்ள்ஸ் இதழ் இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது. விருது பெற்ற பயண ஆவணப்படத் தயாரிப்பாளரான ஜூலியானா ப்ரோஸ்ட் இந்தப் பட்டியலில் இலங்கையைத் தேர்ந்தெடுத்துள்ளார். அதிக பணவீக்கம் இருந்தாலும், இலங்கை இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலாத்தலமாக இருக்கும் என ஜூலியானா தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம், கண்டி, யானைகள் சரணாலயம் மற்றும் யால தேசிய பூங்கா ஆகியவை சுற்றுலாத் தலங்களாகவும், இலங்கையில் குறுகிய தூரத்தில் சென்று பார்க்கக்கூடிய பல இடங்கள் இருக்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார். (எ-இ)

# அன்பு, பணிவு, கீழ்ப்படிதல் இல்லையேல் பலமுடையவராக இருந்தும் பயனில்லை

## அருட்பணி எஸ்.டிக்சன் தெரிவிப்பு

நாம் பணம், பதவி, பலம் என சகல திறமைகள் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால் கீழ்ப்படிதல், பணிவு அற்ற நிலை, மற்றவர்களுக்கு உதவி செய்யாத நிலையில் நாம் இருந்தால் எம்மிடம் எந்தப் பலம் இருந்தாலும் அவைகள் வீணே என்பதை மறக்கக்கூடாது.

இவ்வாறு பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய அருட்பணி எஸ்.டிக்சன் தெரிவித்தார்.

பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற குருத்தோலை ஞாயிறு வழிபாட்டில் தனது மறையுரையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிறிஸ்து தனது புதுமையாலும் உவமையாலும் கூறிய விடயத்தைவிட தனது உயிர்த்தெழுதலினாலே பல உண்மைகளை எடுத்துக் கூறியுள்ளார். தன்னைக் காட்டிக் கொடுப்பார்கள். இறுதி' நேரத்தில் தனது அப்போஸ்தலர்களும் தன்னுடன் இருக்க மாட்டார்கள் என இயேசுவுக்கு தெரிந்திருந்தும் அவர் அவர்களை ஏற்றுக் கொண்டார். அவர்களை மன்னித்தார். இவ்வாறே எம்முடன் ஒன்றித்து வாழ்பவர்கள் துன்பத்தை உண்டு பண்ணுவார்கள், காட்டிக் கொடுப்பார்கள்.

எமக்கு எதிரிகளாக இருக்கும் சமூகத்தையே நாம் பார்க்கின்றோம். நாம் பலம் கொண்டவர்களாக சகல திறமைகளுடன் இருக்கலாம். ஆனால் எம்மிடையே பணிவு அற்ற நிலை, மற்றவர்களுக்கு உதவி செய்யாத நிலை இருக்குமானால் எம்முடன் எந்தப் பலம் இருந்தாலும் அவைகள் வீணே என்பதை மறக்கக்கூடாது - என்றார். (ஒ-14-60)

# தென்மராட்சியில் நிவாரண அரிசிப் பொதி விநியோகம்

சாவகச்சேரி, ஏப். 7

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண அரிசிப் பொதிகள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 11 ஆயிரம் குடும்பங்களுக்கு கடந்த மூன்று தினங்களில் நிவாரண அரிசிப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. பொதிகள் கிடைக்கப்பெறாத கிராம அலுவலர் பிரிவுகளுக்கு இன்று வெள்ளிக்கிழமை அரிசிப் பொதிகள் வழங்கப்படும். பிரதேசத்தில் நிவாரண அரிசிப் பொதிகள் பெற 13 ஆயிரத்து 401 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளன என தென்மராட்சி பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி...

பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.
நேற்று மதியம் மோட்டார் சைக்கிளில் சென்ற நபரொருவர், அந்தப் பெண்ணிடம் கோப்பாய் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவிலிருந்து வருகை தந்துள்ளதாகத் தன்னை அடையாளப் படுத்தியுள்ளார். இதையடுத்து, அடுத்து வரும் மாதங்களில் அரசாங்கம் 5 ஆயிரம் ரூபா சமுர்த்திக் கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். எனவே அதற்காக தாம் ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிகளிடமிருந்தும் 20 ஆயிரம் ரூபா பணத்தை அறவிடுகிறோம் என்று தெரிவித்து, நான்கு படிவங்களைக் கொடுத்து அதில் கையொப்பமிட்டு வழங்குமாறு கூறி அவரிடம் இருந்து 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.
தன்னிடம் தற்போது அவ்வளவு தொகை பணம் இல்லை. அயலிலுள்ளவர்களிடம் பெற்றுத்தான் வழங்கவேண்டும் என வயதான பெண் தெரிவித்தபோதிலும், பணத்தை உடனடியாக வழங்காவிட்டால் எதிர்வரும் மாதங்களில் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என கடும் தொனியில் தெரிவித்து பணத்தை அபகரித்துச் சென்றுள்ளார். அத்துடன், அந்தப் பெண்ணின் அலைபேசியையும் அவர் திருடிச் சென்றுள்ளார். இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த வாரம் நீர்வேலிப் பகுதியிலும் இதுபோன்றதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும், இவ்வாறான மோசடிப் பேர்வழிகளிடம் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (அ-ம-26)

## பயங்கரவாத...

கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது சற்று பிற்போடப்படுகின்றது. ஆய்வுக்காக காலம் அவசியம் என சட்டத்தரணிகள், எதிர்க் கட்சிப் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரம்தான் இவ்வாறு பிற்போடப்படுகின்றது. எனினும், ஏப்ரல் இறுதியில் அல்லது மே முதல்வாரத்தில் சட்டவரைவு சபையில் முன் வைக்கப்படும். சட்டவரைவு முன்வைப்பதற்கு முன்னர், நாடாளுமன்றத்தில் கலந்துரையாடல் அவசியம் என எதிரணிகள் கோரிக்கை விடுத்தன. இதன்படி ஏப்ரல் 25ஆம் திகதி துறைசார் மேற்பார்வைக்குழுக் கூட்டத்தின்போது விவகாரம், விவாதத்துக்கு எடுக்கப்படும். புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் தொழிற்சங்கவாதிகள், சமூக செயற்பாட்டாளர்களுக்கு பாதிப்பு இல்லை. மக்களைப் பாதுகாக்கவே சட்டவரைவு வருகின்றது' - என்றார்.
பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைவு தொடர்பான அறிவிப்பு கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானியில் வெளியானது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழித்து, அதற்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அறிமுகப் படுத்தப்படவுள்ளது. இந்தப் புதிய சட்டத்துக்குப் பல தரப்பிலிருந்தும் கடும் எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன. சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் போதிய ஆலோசனைகள் இன்றி வர்த்தமானியில் இந்தச் சட்டவரைவு வெளியிடப்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்ததுடன், இது தொடர்பில் மீளாய்வு செய்வதற்குக் குழுவொன்றையும் நியமித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## பாணின்...

எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத் தலைவர் க.குணரத்தினம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:-
வெள்ளிகிழமை (இன்று) காலை முதல் 450 கிராம் எடையுள்ள பாண் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்படவுள்ளது. சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டதையடுத்தே, யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம் இந்த விலைக்குறைப்பை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது. எதிர்காலத்தில் கோதுமை மா, எண்ணெய் மற்றும் முட்டையின் விலை குறையும் பட்சத்தில், வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலையை மேலும் குறைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் - என்றார். (அ-ம)


## நினைவேந்தல் நிகழ்வு



**அமரர் சுந்தரம் டிவகலாலா**
அவர்களின்
**நினைவேந்தல் நிகழ்வு**

- இடம் : யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபம்
- காலம் : 08.04.2023 சனிக்கிழமை
- நேரம் : முற்பகல் 9.30 - பிற்பகல் 12.30

நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆறுதல்,
55/1, ஸ்ரான்லி கல்லூரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

ஆறுதல் சமூகம்,
யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.

(cs 49892) (N.I)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சுப்பர் மார்கட்டுக்கு வேலையாட்கள் தேவை.
(பெண்கள்)
**077 355 1631**
(CS24334)(J-1)

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு கொத்து றொட்டி போடுதல், பிறைட் றைஸ் தயாரித்தல், றொட்டி வேலை செய்தல் போன்ற மூன்று வேலைகளிலும் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.
**077 649 1027**
(CR39612)(J-1)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 . 05 . 2005 | 05 . 04 . 2023 |



### மோகனதாஸ் கிஷோத்மன்

கே.கே.எஸ். வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மோகனதாஸ் கிஷோத்மன் கடந்த (05.04.2023) புதன்கிழமை காலமானார்.
அன்னார் மோகனதாஸ் கௌரி தம்பதியரின் பாசமிகு மகனும், மதுஷனா, ஜானுகா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கணேஸ் மற்றும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற வடிவேலு மற்றும் இராசம்மா ஆகியோரின் பேரனும், பிறேமதாஸ் - வதனி ஆகியோரின் பெறா மகனும், றஜனி - பாலச்சந்திரன், காலஞ்சென்ற லோகினி - ஜெகநாதன் ஆகியோரின் மருமகனும், சிறிதரன் - ராகினி மற்றும் கஜேந்திரன் - சுபாஹறி, விஜேந்திரன் (கோபி) - மிரா, குமரேந்திரன் ஆகியோரின் மருமகனும், வனஜா- மோகன், ரஜிதா - கமல்ராஜ் ஆகியோரின் பெறாமகனும், சஜீபன், விதுர்சன், வேனுகன், துளசிகா, கஜானா, ஜதுகேசன் லிதிகேஸ் சாஜித், லிசானா, கவினாஸ், சுவர்ணிலக்சுஜி, பிரணீத் ஆகியோரின் மைத்துனரும், கவின்சன், அனுஷ்கா, அர்வி, விஷ்ணி, ஆதிரா ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (09.04.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 48 444 28**

தகவல்:
**குடும்பத்தினர்.**
(CS 24338) A-1

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 . 08 . 1946 | 06 . 04 . 2023 |



### இராஜகுலசூரியர் சிங்கமாப்பாணர்

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட இராஜகுலசூரியர் சிங்கமாப்பாணர் நேற்று (06.04.2023) வியாழக் கிழமை திருநிலை யடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற இராஜகுலசூரியர் - சிவபாக்கியம் இணையரின் அன்பு மகனும், திலகவதியின் அன்புக்கணவரும், சொர்ணாம்பிகை, சர்வாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் ஸ்ரீபால கணேசமூர்த்தி, அமரர் சிவபாக்கியம், திரிபுவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், கஜன், சிவநந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதாகர், பிரஷானி ஆகியோரின் அன்பு மாமனாரும், இனியா, ஈகன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.
அன்னாரின் பருவுடல் இன்று (07.04.2023) காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெறும் இறுதி அஞ்சலிகள்/ கிரியைகளின் பின்னர், சுன்னாகம் கொத்தியாலடி சைவ மயானத்தில் முற்பகல் 10.00 மணிக்கு தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.
அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

(திலகவதி சிங்கமாப்பாணர்
+94779231747)
162, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**
(CR 39613) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லை...

அனலைதீவுக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளுக்காக கடந்த 23ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களில் 11 மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர். ஒருவருக்கு 14 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அனலைதீவு கடற்பரப்பில் இரண்டு படகுகளில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மேற்படி 12 மீனவர்களும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்கள் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த 12 மீனவர்களில் 11 மீனவர்கள் எச்சரித்து விடுவிக்கப்பட்டனர். எனினும், ஒருவர் ஏற்கனவே எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கைக்காக எச்சரிக்கப்பட்டமையால், மீண்டும் அதே குற்றத்தைப் புரிந்தமைக்காக 14 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். கைப்பற்றப்பட்ட இரண்டு படகுகளில் ஒன்றின் உரிமையாளர் சம்பவத்தின் போது (அத்துமீறிய மீன்பிடியின்போது) படகில் பிரசன்னமாகி இருந்துள்ளார். எனவே அவருடைய படகு அரசுடமையாக்கப்பட்டது. மற்றைய படகு தொடர்பான உரிமைகோரும் வழக்கு மே மாதம் 6ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-26,66)

## இந்து...

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

இலங்கை அரசாங்கம் தனது இராணுவத்தின் உதவியுடன் இலங்கையின் வடக்கு - கிழக்கில் இந்து கலாசாரம், பாரம்பரியம், ஆலயங்கள் ஆகியவற்றை இலக்கு வைக்கிறது. இலங்கையின் வடபகுதியில் அதிகளவு மதிப்புக்குரியதாகக் காணப்படும் கீரிமலை பகுதியில் காணப்பட்ட ஐந்து நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்டுள்ள ஆதிசிவன் ஆலயம் இராணுவ ஆக்கிரமிப்பு என்ற போர்வையில் அழிக்கப்பட்டுள்ளதை ஆழ்ந்த கரிசனையுடனும் அவசரத்துடனும் நாங்கள் உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது இராணுவம் அந்தப் பகுதியைக் கைப்பற்றி, மிக நீண்டகாலம் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த பின்னர் பொதுமக்களை அங்கு செல்வதற்கு அண்மையில் அனுமதித்தபோது இந்த விடயம் தெரியவந்தது. ஆலயம் இருந்த பகுதியில் அதனை அழித்துவிட்டு ஜனாதிபதி மாளிகையொன்றைக் கட்டியுள்ளனர். இதன்மூலம் இந்துக்கள் இறந்தவர்களுக்கான இறுதி மரியாதைகளை முன்னெடுக்கும் பகுதியின் புனிதத்தை இராணுவத்தினர் சீர்குலைத்துள்ளனர்.

இந்துப் பாரம்பரியம், கலாசாரத்தின் இறுதிச் சின்னமாகக் காணப்படுகின்றவற்றை அழிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இலங்கை அரசாங்கம் செயற்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தை பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்தியாவும், சர்வதேச சமூகமும் பிணையெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளபோதிலும் இந்த அடக்குமுறைகள் இடம்பெறுகின்றன. புனிதப் பொருள்களை அவமதிக்கும் இந்தச் செயல் இடம்பெற்ற சில காலத்துக்குள் திருகோணமலையில் உள்ள இந்துக்களின் புனித பகுதியான கன்னியா வெந்நீரூற்றை அநுராதபுர நகரத்துடன் தொடர்புடையது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. அதனை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. முல்லைத்தீவு குருந்தூர்மலையில் உள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அழிக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டம் வெடுக்குநாறிமலையில் உள்ள ஆலயத்தின் பல விக்கிரகங்கள் திருடப்பட்டும், அழிக்கப்பட்டும் உள்ளன.

இலங்கைக்கான சர்வதேச உதவிகளை நாங்கள் வரவேற்கும் அதேவேளை, இலங்கையில் இந்து பாரம்பரியம், கலாசாரம் ஆகியவற்றை அழிக்கும் தனது நிகழ்ச்சி நிரலுக்கு இலங்கை அரசாங்கம் இந்த உதவியை பயன்படுத்த, நிதி வழங்கும் சமூகம் அனுமதிக்கக்கூடாது என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். இந்து மத கலாசாரம் அழிக்கப்படுவதை தடுப்பதற்காக இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறையை அமைக்கவேண்டும் என இலங்கை அரசாங்கத்தை, இலங்கைக்கு நிதி வழங்கும் சமூகம் வலியுறுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம)

## மருத்துவ...

ஏற்படுகின்றன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாண ஒருங்கிணைப்பாளர் தணிகாசலம் மயூரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் சிறுவர் மருத்துவ நிபுணர்கள் நால்வர் அண்மையில் நாட்டைவிட்டு வெளியேறியதை அடுத்து, அந்த மருத்துவமனையின் சிறுவர் விடுதி மூடப்பட்டுள்ளது. இந்த நிலை யாழ்ப்பாணத்திலும் எதிர்வரும் நாள்களில் இடம்பெறலாம் என்று நாங்கள் அச்சப்படுகின்றோம்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை என்பது மருத்துவ மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கும் உரிய ஒரு மருத்துவமனை. ஆதலால், நோயாளர்களின் மருத்துவ நெருக்கடிக்கு மேலதிகமாக, இந்த அரசாங்கத்தின் செயற்பாடு காரணமாக மருத்துவ மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது. இங்கு மட்டுமல்ல இலங்கை முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் இருந்து மருத்துவர்களும், மருத்துவ நிபுணர்களும் வெளியேறும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே அரசாங்கம், இந்தப் பேரிடரைப் புரிந்துகொண்டு இந்த மருத்துவப் பெருநெருக்கடியையும் மருத்துவர்களின் கோரிக்கைகளையும் நிவர்த்திசெய்யவேண்டும் - என்றார்.

இதேவேளை - கடந்த ஆண்டு மட்டும் 700 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## மின்சாரம்...

இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மின்னழுத்தியை மின்பிறப்பாக்கியுடன் இணைக்க முற்பட்டவேளை ஏற்பட்ட மின்னொழுக்குக் காரணமாக மின்சாரம் தாக்கியதிலேயே அந்த மாணவன் உயிரிழந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


உயிரிழந்த மாணவனின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த (10.03.2023) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சந்திரசேகரம்பிள்ளை புஸ்பநாதன்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)



**தோற்றம்** **27.10.1940** **மறைவு** **10.03.2023**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.04.2023) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் "கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும்" வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற்று அதனைத்தொடர்ந்து **அன்ன பூரணி மண்டபத்தில் (பொற்பதி வீதி, சிவமகாகாளி அம்பாள் கோவில் அருகாமை)** முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மற்றும் பத்திரிகை வாயிலாகவும் எமது துயரிலும் பங்கெடுத்து அவரது இறுதிக்கிரியைகளிலும் கலந்துகொண்டு உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**குடும்பத்தினர்**

(cs 49893) (N - 1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ஐக்கிய...**


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் இணைய எந்நேரமும் தயாராகவுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுடன் இணையவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் எம்முடன் பேச்சு நடத்தியுள்ளனர். அவர்கள் எப்போது அரசுடன் இணைவார்கள் என்று தெரியாது.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்களாவர். எனவே, தற்போது எதிர்க்கட்சியில் இருக்கும் குறித்த உறுப்பினர்களை வலைவீசி எடுக்கும் தேவை ரணிலுக்குக் கிடையாது. அவர்கள் தாமாகவே ரணிலுடன் இணைவார்கள். எனினும், தற்போதைய நிலைமையில் கட்சி அரசியலை நான் பேச விரும்பவில்லை. அதற்கான நேரம் இதுவல்ல. மக்கள் நலன் என்ற ரீதியில் - அரசு என்ற ரீதியில் நாம் அனைவரும் ஓரணியில் செயற்பட வேண்டும். அப்போதுதான் நாடு மீளெழுச்சி பெறும்' - என்றார்.

(அ-ம-22)



சென்னையில் நாவலர் பெருமானின் உருவச்சிலையொன்று நேற்றுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (ம)


**விற்பனைக்கு**

பழைய இரும்பு Double Gate (10.12 அடி) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 070 707 1799

(cs 49886) N-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 51 பரப்புக் காணி விற்பனைக்கு.

**நிலப்பரப்பு**

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபா மட்டும் (125.000/=)

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

தொடர்பு: 076 755 8606
077 6385 683

(CS 24336 C) A-1

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்புக் காணி விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் ( 200.000/= )
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- 076 733 6047, 076 333 6079
076 733 6093

(CS 24336 B) A1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத் திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 7390 413, 076 4365 814

(CS 24336 A) A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
  2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✓ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✓ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்.
- ✓ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 48 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

077 8147 389
077 9865 457

4333) (J-1)


## 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் சின்னத்துரை வரதராசா (வரதன்)

கடந்த (07.03.2023) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது அன்புச் சகோதரர் அமரர் சின்னத்துரை வரதராசா (வரதன்) அவர்களின் முதலாம் மாத ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (07.04.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.**

மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி மற்றும் வலைத்தளங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் பல வழிகளிலும் உதவி, ஒத்தாசைகளும் வழங்கிய அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"குமுதினி இல்லம்",
இராசவீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

சகோதரி
சிவகுமார் சோதிமலர்
(குஞ்சு)
077 803 4061

(CS 49885)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.